காங்கயம் நகருக்குள்...

சூழ்ந்த ஆபத்து...

காங்கயம் நகரில் அகிலாண்டபுரம் பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளி அருகில் மின் கம்பம் கம்பி மறையும் அளவுக்கு செடி, கொடிகள் வளர்ந்துள்ள நிலையில், இந்த இடத்தைதான் மதிய வேளையில் பள்ளி மாணவர்கள் சிறுநீர் கழிப்பதற்கு பயன்படுத்தி வருகின்றனர். இரும்பிலான மின்கம்பத்தில் படர்ந்துள்ள தாவரங்களை அகற்றுவதற்கு மின்வாரியத் துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்பார்ப்பு.

வர்ணம் பூசப்படுமா?

காங்கயம் நகருக்குள் ஆங்காங்கே புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் பல்வேறு இடங்களில் வெள்ளை வர்ணம் பூசப்படாமல் வேகத் தடைகள் காணப்படுகின்றன. இதனால் இரவு நேரங்களில் இருசக்கர வாகன ஓட்டுநர்கள் விபத்தில் சிக்கும் நிலை உள்ளது. கோவை வழித்தடத்தில் இருந்து உடையார் காலனி செல்லும் சாலையில் வெள்ளை வர்ணம் பூசப்படாமல் உள்ள வேகத்தடை. இதுதொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எங்கே வரவேற்பு?...

காங்கயம் அருகே கரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையோரத்தில் பகவதிபாளையம் பிரிவு பகுதியில், ஊராட்சி ஒன்றிய எல்லை முடிவு, ஊராட்சி ஒன்றிய எல்லை வரவேற்பு என இருபுறம் குறிப்பிட்டு வைக்கப்பட்டிருந்த அறிவிப்புப் பலகை கீழே விழுந்துள்ளது. இதை உரிய இடத்தில் பொருத்துவதற்கு ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கை.

வாகன ஓட்டிகள் கவனத்துக்கு...

காங்கயம்–கரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வீரணம்பாளையம் பகுதி அருகே சாலையோரத்தில் உடைப்பு ஏற்பட்டு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, அச்சுறுத்தலாக உள்ள சாலையை சரி செய்ய நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே வாகன ஓட்டிகளின் வலியுறுத்தலாக உள்ளது.

இன்றைய மின்தடை

வடுகபட்டி

தாராபுரம், ஜூலை 12: பராமரிப்புப் பணிகள் காரணமாக தாராபுரம் கோட்டம், வடுகபட்டி துணை மின் நிலையத்துக்குள்பட்ட குமாரபாளையம், வடுகபட்டி, மூக்குதரித்தான் பாளையம், சுள்ளபெரிக்காபாளையம், சம்மந்கரை, வண்ணாபட்டி, பட்டுத்துறை, வரப்பட்டி, நீலாங்காளிவலசு, பி.ராமபட்டணம் ஆகிய பகுதிகளில் திங்கள்கிழமை (ஜூலை 13) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்று தமிழ்நாடு மின்வாரிய தாராபுரம் கோட்ட செயற்பொறியாளர் கேசவராஜ் அறிவித்துள்ளார்.

அவிநாசி–வஞ்சிபாளையம் சாலையை விரிவாக்கம் செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்

விபத்தில் காயமடைந்தவர்கள்போல ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்.

அவிநாசி, ஜூலை 12: அவிநாசி–வஞ்சிபாளையம் சாலையை விரிவாக்கம் செய்யக் கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பூர் மாவட்டம், அவிநாசியில் இருந்து வஞ்சிபாளையம் செல்லும் சாலை மங்கலம், பல்லடம் செல்ல பிரதானமாக உள்ளது. குறிப்பாக வஞ்சிபாளையம் ரயில் நிலையம் உள்ளது. ஆனால், அவிநாசி – வஞ்சிபாளையம் சாலை மிகவும் நெருக்கடியாக உள்ளதால் அவ்வழியாக தினமும் செல்லும் ஆயிரக்கணக்கான கனரக வாகனங்கள், பள்ளி வாகனம், இருசக்கர வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருகின்றன.

மேலும், இந்த சாலையில் பல்வேறு இடங்களில் அனுமதியின்றி தடுப்புக் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. எனவே சாலையை உடனடியாக விரிவாக்கம் செய்ய வேண்டும், மையத் தடுப்பு அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விபத்தில் காயமடைந்தவர்கள்போல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கட்சியின் துணைச் செயலாளர் ஹனிபா தலைமை வகித்தார். சிஐடியு மாநிலக் குழு உறுப்பினர் முத்துசாமி, ஒன்றியச் செயலாளர் ஈஸ்வரமூர்த்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...
திருப்பூர் : 73730 55255
காங்கேயம் : 99428 33477
உடுமலைப்பேட்டை : 90435 00177
கோயம்புத்தூர் : 97902 12447
உதவி மைய எண் : 88070 00216

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள
திருப்பூர் 94439 32550
அவிநாசி 99427 83423
பல்லடம் 99523 15083
உடுமலை 94434 31489
வெள்ளக்கோவில் 98657 70640
காங்கயம் / தாராபுரம் 92451 17207

தவெகவுக்கு விழுந்த வாக்குகள் இனி சரியும்

அதிமுக செய்தித் தொடர்பாளர் கல்யாணசுந்தரம்

திருப்பூர், ஜூலை 12: தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தவெகவுக்கு விழுந்த வாக்குகள் இனி சரியும் என்று அதிமுக செய்தித் தொடர்பாளர் கல்யாணசுந்தரம் பேசினார்.

திருப்பூர் மாநகர், மாவட்ட அதிமுக செயல்வீரர்கள் கூட்டம், அங்கேரிபாளையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் பொள்ளாச்சி வி.ஜெயராமன், திருப்பூர் மாநகர், மாவட்டச் செயலாளர் வேல்குமார் சாமிநாதன், புறநகர் மாவட்டச் செயலாளர் சிவசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் கல்யாணசுந்தரம் பேசியதாவது: அதிமுக ஒருபோதும் சோடை போகவில்லை. ஒரு கோடிக்கும் அதிகமான வாக்குகளை தற்போதும் வாங்கி இருக்கிறோம். பல்வேறு காலகட்டங்களிலும் அதிமுக இனி துளிர்க்காது என்று பேசினார்கள். கடந்த 2021-இல் திமுக வென்றபோதும் அதிமுக இனி அவ்வளவுதான் என்று பேசினார்கள். 180 தொகுதிகளை வென்றவர்களின் தலைவரே இன்று வெற்றி பெறவில்லை. தவெகவுக்கு விழுந்த வாக்குகள் இனி சரியுமே தவிர வளராது. இந்த தேர்தல் அரசியல் கட்சிகளை கார்ப்பரேட் வென்ற தேர்தல். குடும்பத்துக்காக உழைக்கும் இளைஞர்கள் நம்மிடம் தான் இருக்கிறார்கள் என்றார்.

பொள்ளாச்சி வி.ஜெயராமன் பேசும்போது, 'எடப்பாடி பழனிசாமி தலைமையின் மீது அசைக்க முடியாத விசுவாசத்தோடு உழைத்த வர்கள் என்பதால், அதிமுகவை எந்தக் காலத்திலும் எவருடைய துணை அமைப்பாகவும் மாற்ற முடியாது. மீண்டும் அதிமுக அரியணை ஏறும்' என்றார்.

திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காவல் கண்காணிப்பாளர் இரவு நடை ரோந்து

திருப்பூர், ஜூலை 12: திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காவல் கண்காணிப்பாளர் சிருஷ்டி சிங் இரவு நேர நடை ரோந்து மேற்கொண்டார்.

இதுதொடர்பாக காவல்துறையினர் கூறியதாவது:

திருப்பூர் மாவட்டக் காவல் கண்காணிப் பாளர் சிருஷ்டி சிங் உத்தரவின்பேரில் மாவட்டம் முழுவதும் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும் பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, குண்டடம் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதிகளில் காவல் கண்காணிப்பாளர் சிருஷ்டி சிங் சனிக்கிழமை இரவு ஆய்வு மேற்கொண்டார்.

அங்குள்ள முக்கிய வீதிகள், வணிக வளாகப் பகுதிகள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் போலீஸாருடன் இணைந்து தீவிர நடை ரோந்து பணியில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்களிடம் நேரடியாகப் பேசினார்.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் போக்ஸோ சட்டம், இளைஞர்கள் மற்றும் மாணவர்களைச் சீரழிக்கும் போதைப் பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிப்பது மற்றும் அதன் தீமைகள் குறித்தும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வழிகாட்டு தல்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தாராபுரம் உட்கோட்ட காவல் அதிகாரிகள், குண்டடம் காவல் நிலைய காவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

வெள்ளக்கோவிலில் 10 வீடுகளில் மின், குடிநீர் மீட்டர்கள் திருட்டு

வெள்ளக்கோவில், ஜூலை 12: வெள்ளக்கோவிலில் அடுத்தடுத்து 10 வீடுகளில் மின் மற்றும் குடிநீர் மீட்டர்கள் திருடப்பட்டுள்ள சம்பவம் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வெள்ளக்கோவில் நகராட்சிக்குள்பட்ட செம்மாண்டம்பாளையம் சாலையில் குடியிருப்புகள் நிறைந்த ராஜீவ் நகர் பகுதியில் கடந்த சில நாள்களாக அங்குள்ள வீடுகளைக் குறிவைத்து நள்ளிரவில் மர்ம நபர்கள் திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் அடுத்தடுத்து சுமார் 10 வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த மின் மீட்டர்கள், நகராட்சி நிர்வாகத்தால் வழங்கப்பட்ட குடிநீர் மீட்டர்களை சனிக்கிழமை ஒரே இரவில் மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

மீட்டர்களை மட்டுமின்றி வெளிப்புறச் சுவர்களில் மாட்டியிருந்த மின் மீட்டர் பாதுகாப்புப் பெட்டிகளையும் பெயர்த்து எடுத்துச் சென்றுள்ளனர். வீட்டில் வசித்தவர்கள் காலையில் எழுந்து பார்த்துபோது, மீட்டர்கள் திருடப்பட்டுள்ளதைக் கண்டு கண்டு அதிர்ச்சியடைந்தனர். கடந்த சில நாள்களுக்கு முன்பு இதே பகுதியில் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர வாகனங்களும் திருடப்பட்டுள்ளது. இதையடுத்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளைக் கொண்டு போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கஞ்சா விற்ற 4 பேர் கைது

பல்லடம், ஜூலை12: பல்லடம் அருகே கஞ்சா, போதை மாத்திரைகள் விற்ற 4 பேர் கைது செய்யப்பட்டனர். பல்லடம்- மங்கலம் சாலையில் உள்ள சேடபாளையம்பிரிவு அருகே பல்லடம்போலீஸார் வாகன சோதனையில் சனிக்கிழமை ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக நடந்து வந்த 3 பேரிடம் விசாரித்தனர். இதில் பல்லடம் அருகே உள்ள அறிவொளி நகரைச் சேர்ந்த ஸ்டீபன்ராஜ் (25), கௌதம் (23),சூர்யா (25) ஆகியோர் என்பதும்,விற்பனைக்காக ஒரு கிலோ 200 கிராம் கஞ்சா வைத்திருந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து அவர்களை போலீஸார் கைது செய்து கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

TRANSFER CERTIFICATE
காணவில்லை
இப்பவும். எனது Transfer Certificate (TC) சான்றிதழ் (P.V.K.Naidu Higher Secondary School, Pongalur - 641 667) 20-05-2026 ம் தேதி திருப்பூர். இரயில் நிலையம் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு நகல் எடுக்க சென்ற போது தவறிவிட்டது. மேற்படி எனது சான்றிதழை கண்டெடுப்பவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.
Myilsamy C
S/o. Chinnasamy
5/135, Kallimedu, Pethampalayam, Ganapathipalyam, Palladam, Tirupur-641605
Mob. 9952210005

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
பிராந்திய சொத்து மீட்புக் கிளை (ROSARB)
2வது தளம், பிராந்திய அலுவலக வளாகம், 82, வங்கி சாலை, கோயம்புத்தூர்
போன் : 9790247824
Email: SARCOI@bankofbaroda.bank.in

மின்னணு ஏல அறிவிப்பு

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ- ஏல அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 6(2) & 8(6)க்கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து நிலுவைத்தொகையை திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த பேங்க் ஆஃப் பரோடா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / கடனீட்டுச் சொத்து/கள் / நிலுவைகள் / குறைந்தபட்ச விலை / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம், முன்வைப்புத்தொகை, ஏல உயர்வுத்தொகை ஆகியவை பின்வருமாறு:

1. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: கடன்தாரர் **M/s. Avathaar Industries** (கடன்தாரர்) KK ஆச்சாரிஸ், VK பாளையம், கரடிவாவி வழி, புளியம்பட்டி கிராமம், பல்லடம் தாலுக்கா, திருப்பூர்- 641658 **அதன் பிரதிநிதியாக பங்குதாரர்கள் திரு.மதி. P.காயத்திரி.** க/பெ. திரு. இளங்கோவன், (M/s. Avathar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர்), கதவு எண். 5/129, கணேஷ் கார்டன், காடம்பட்டி, சூலூர், கோயம்புத்தூர்- 641401 **திரு. M. ஜெகதீசன்.** க/பெ. N.மருதாச்சலமூர்த்தி (M/s. Avathaar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர்), எண். 7/42-30, குமரன் நகர், கட்டம்-2, கீரநத்தம், சரவணம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர்- 641035, **திருமதி. K.பத்மாவதி.** க/பெ. K. கந்தசாமி (M/s. Avathaar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர், ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்), கதவு எண் 82-4/1B, சமப்பா லேஅவுட், கெண்டையூர் கிராமம், சிக்கடசம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர்- 641305

மொத்த நிலுவைத் தொகை : 31.05.2026 தேதிப்படி ரூ. 1,44,56,474/- மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்

அசையா சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார்பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிக்கடசம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் நகரம் கெண்டையூர் S.F. எண் 272/1 பட்டா எண் 531-ன் 2.82 ஏக்கர் நிலத்தில் வடக்குபுறத்தில் 1.79 ஏக்கர் நிலத்தில்அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் சி.எண் 2516/81 CNR 5L P/R (CN) 137/81ன் வீட்டு மனைகளாக உருவாக்கப்பட்டதில் தெற்குப்புறத்தில் மனை எண் 11-ன் அரை பங்கு நிலத்தின் அளவு 1237½ சதுர அடி அதன் **எல்லைகள்: வடக்கு:** A. பெலோமினாவுக்குச் சொந்தமான மனை எண் 11-ன் வடபுறத்தில் அரைபங்கு, **தெற்கு** : மனை எண் 12, **கிழக்கு:** மக்கலியப்பனுக்குச் சொந்தமான மனை எண் 10-இல் உள்ள வீடு, **மேற்கு** : மனைப்பிரிவின் வரைபடத்தில் உள்ளவாறு 30 அடி வடக்கு தெற்கு சாலை. **அளவுகளில்:** கிழக்கு- மேற்காக-வடக்கில் 41½ அடி, கிழக்கு-மேற்காக தெற்கில்- 41 அடி. வடக்கு- தெற்காக மேற்கில்- 30 அடி. வடக்கு- தெற்காக கிழக்கில்- 30 அடி. இதில் நிலத்தின் அளவு 1237 லு சதுர அடி காலி நிலம் மற்றும் சொத்தின் வழிப்பாதைகள் மனைப்பிரிவின் சாலைகள் பயன்படுத்துவதற்கு உரிமைகள் உள்ள அனைத்து இதர வசதிகளையும் கொண்டவை. மேலே கூறப்பட்ட கட்டுமான வீட்டின் கதவு எண். 82/4 (1B) அதன் கதவுகள், ஜன்னல்கள், மற்றும் மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு இதரவை. கதவு எண் 82/4 (1B), சொத்து வரி மதிப்பீட்டு எண் 14515, குடிநீர் வரி மதிப்பீட்டு எண் 6799, மின் இணைப்பு எண் 153-008-445. இச் சொத்து, மேட்டுப்பாளையம் நகரப் பஞ்சாயத்து மேட்டுப்பாளையம் நகர பழைய வட்ட எண் 13, புதிய வட்ட எண் 24, T.S.எண் 26, பிளாக் எண் 46-ன் எல்லையில் உள்ள இச்சொத்து **திருமதி K.பத்மாவதி.** க/பெ. கந்தசாமி பெயரில் உள்ளது. **அடையாளப்பூர்வ சுவாதீனம்**
(அட்சரரேகை: 11.297842 தீர்க்கரேகை: 76.928369)

குறைந்தபட்ச விலை	முன்வைப்புத் தொகை	ஏல உயர்வுத் தொகை
ரூ. 35,00,000/-	ரூ. 3,50,000/-	ரூ. 50,000/-

2. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: M/s. இன்னோவ் இம்பெக்ஸ் (கடன்தாரர்). பிரதிநிதிகளாக அதன் பங்குதாரர்கள் **திரு. P.பிரபு** மற்றும் **திரு. கார்த்திக்,** எண்.7/1, புத்தூரான் தோட்டம், சாமுண்டிபுரம், திருப்பூர் 641603. **திரு. P. பிரபு (பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்).** த/பெ. திரு. பழனிசாமி, எண். 24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர்-641607. **திரு. P. கார்த்திக் (பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்).** த/பெ. பழனிசாமி, எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர்-641607. **திரு. P. பழனிசாமி (ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்) (இறந்துவிட்டார்).** எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர்-641607, **திருமதி பூங்கொடி.** திரு. பழனிசாமியின் சட்டப்பூர்வ வாரிசு, **திரு. கார்த்திக்.** திரு. பழனிசாமியின் சட்டப்பூர்வ வாரிசு, **திரு. பிரபு.** திரு. பழனிசாமியின் சட்டப்பூர்வ வாரிசு.

மொத்த நிலுவைத் தொகை : 31.05.2026 தேதிப்படி ரூ. 1,30,49,880/- மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்

அசையா சொத்து விவரம்:
சொத்து எண் 1: திரு. பழனிசாமி. த/பெ. பொன்னுசாமி (ஜாமீன்தாரர்) பெயரில் உள்ள சொத்து:
ஆவண எண் 2168/1979-இன் படி: திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் நகரம், அப்பாச்சி நகர் விரிவு தொட்டிப்பாளையம் கிராமம், G.S. எண் 546ன் தகவலுக்காக T.S. எண் 23/1/2ன் மனைப் பிரிவாக உருவாக்கப்பட்டு அதில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு வீட்டு மனை எண் 8ன் அளவு 2810 சதுர அடி. அதன் **எல்லைகள்** பின்வருமாறு: **தெற்கில்**– நாச்சிமுத்துவிற்குச் சொந்தமான நிலம்; **வடக்கில்**– 30 அடி அகலமுள்ள கிழக்கு-மேற்குச் சாலை; **மேற்கில்**– 40 அடி அகல தெற்கு-வடக்குச் சாலை; **கிழக்கில்**– பழனியம்மாள் என்கிற சின்னம்மாள் என்பவருக்குச் சொந்தமான மனை எண் 7. இதற்கிடையில், கிழக்கு-மேற்காக இரு புறமும் 40 அடி மற்றும் தெற்கு-வடக்காக கிழக்கில் 70 மற்றும் தெற்கு-வடக்காக மேற்கில் 70 ½ அடி மேலே கூறப்பட்டதின் மொத்த அளவு 2810 சதுர அடி அல்லது 261.049 சதுர மீட்டர் நிலம்; அதனுடன் கிணற்றிலிருந்து நீர் எடுக்கும் உரிமைகள் மற்றும் மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் வழக்கமான சாலைகளைப் பயன்படுத்தி சொத்தினை அடைவதற்கான அனைத்து உரிமைகளும் உள்ள நிலம்.
ஆவண எண் 1117/1985-இன் படி: திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் நகரம், அப்பாச்சி நகர் விரிவு, தொட்டிப்பாளையம் கிராமம், G.S. எண். 546 தகவலுக்காக உட்பட்ட T.S. எண்.23/1/2ன் அளவு வடகோடியில் 0.61 ஏக்கர் நிலம் மனைப் பிரிவாக உருவாக்கப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு மனைப் பிரிவின் கிழக்குப் பகுதியில் மனை எண் 6ன் அளவு 1320 சதுர அடி அதன் **எல்லைகள்** பின்வருமாறு: **தெற்கில்**– 30 அடி அகலமுள்ள கிழக்கு-மேற்குச் சாலை; **வடக்கில்**– திருமத்துளுக்குச் சொந்தமான சொத்து, **மேற்கில்**– 40 அடி அகல தெற்கு-வடக்குச் சாலை, **கிழக்கில்**– மேற்குப் பகுதியில் மனை எண் 6ன் திரு. A.K.சுப்பிரமணியனுக்குச் சொந்தமான நிலம். இதனிடையே கிழக்கு-மேற்காக இருபுறமும் 40 அடி, தெற்கு-வடக்காக மேற்குப் பகுதியில் 36 அடி தெற்கு வடக்காக கிழக்குப் பகுதியில் 30 அடி மேலே கூறப்பட்ட சொத்தின் அளவு மொத்தம் 1320 சதுர அடி அல்லது 122.628 சதுர மீட்டர் நிலம்; அதனுடன் கிணற்றிலிருந்து நீர் எடுக்கும் உரிமைகள் மற்றும் மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் வழக்கமான சாலைகளைப் பயன்படுத்தி சொத்தினை அடைவதற்கான அனைத்து உரிமைகளும் உள்ள நிலம். மேலே கூறப்பட்ட சொத்துக்களின் மொத்த அளவு 4130 சதுர அடி நிலம் மற்றும் கட்டப்பட்ட கட்டிடம் உள்ள கட்டிடத்தின் கதவு எண்கள் 2/95, 6/92A, 4/94ன் மதிப்பீட்டு எண்கள் 24025658, 24025656, 24025697; மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு எண்கள் 24085056, 24085268; மற்றும் மின்சார இணைப்பு எண்கள் 03-203-001-152 மற்றும் 03-203-001-813; மற்றும் இதர வசதிகள் உள்ள நிலம். **அடையாளப்பூர்வ சுவாதீனம்**

குறைந்தபட்ச விலை	முன்வைப்புத் தொகை	ஏல உயர்வுத் தொகை
ரூ. 2,53,75,000/-	ரூ. 25,37,500/-	ரூ. 1,00,000/-

சொத்து எண் 2: ஆவண எண் 1450/2004-ன் படி திரு. P. பிரபு மற்றும் திரு. P. கார்த்திக் (பங்குதாரர்கள். ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்கள்) ஆகியோருக்குச் சொந்தமான சொத்து: திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிப்பாளையம் சார்-பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுகா தற்போது திருப்பூர் வடக்கு தாலுகா, நல்லாத்துப்பாளையம், தொட்டிப்பாளையம் கிராமம், G.S. எண். 203/2ன் அளவு 1.13 ஏக்கர் @ ரூ. 1.55 விற்பனையாளர்கள் குமாரசாமி மற்றும் அய்யாசாமி ஆகியோரால் 'தடம்' (வழிப்பாதை) அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிலப்பகுதியைக் கழித்தது போக, மீதமுள்ள 0.93 ஏக்கர் நிலம். அதன் **எல்லைகள்: தெற்கே**– 37 லிங்க்ஸ் கிழக்கு-மேற்குத் தடம்; **வடக்கே**– நல்லாறு புறம்போக்கு; **கிழக்கே**– 37 லிங்க்ஸ் வடக்கு-தெற்குத் தடம்; **மேற்கே**– G.S. எண் 203/3ன் உள்ள நிலம். மேலேகுறிப்பிட்ட நிலத்தின் அளவு 0.93 ஏக்கர் அதனுடன் மொத்த 37 லிங்க்ஸ் கிழக்கு-மேற்கு மற்றும் வடக்கு-தெற்குத் தடங்கள் மற்றும் வழிப் பாதைகள் மற்றும் வழக்கமான வழிப்பாதைகள் மற்றும் வண்டிப் பாதைகள் உட்பட அனைத்து பயன்பாடுகளுக்கும் உரிமை உள்ள நிலம். **நேரடி சுவாதீனம்**

குறைந்தபட்ச விலை	முன்வைப்புத் தொகை	ஏல உயர்வுத் தொகை
ரூ. 2,79,00,000/-	ரூ. 27,90,000/-	ரூ. 1,00,000/-

ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் :	ஏலத் தேதி மற்றும் நேரம் :
27.07.2026 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை	28.07.2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை **https://www.bankofbaroda.bank.in/e-auction.htm** மற்றும் **https://baanknet.com** பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். **9538993885** மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 09.07.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

:பெட்பேங்க் :பைனான்சியல் சர்வீசஸ் லிட். ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு பரவலாக அறிவிக்கப்படுவது யாதெனில், ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனமானது, (கீழே குறிப்பிடப்பட்டுள்ள) கணக்குகளுக்குச் சொந்தமான தங்க ஆபரணங்களை ஏலம் விட முடிவு செய்துள்ளது. இக்கணக்குகள் NPA (வாராக்கடன்) அல்லது வரம்பு மீறல் கொண்ட கணக்கு/கள் அல்லது கடன் **விதிமுறைகள் & நிபந்தனைகளில்** குறிப்பிடப்பட்டுள்ள 'கடன் திரும்பப் பெறுதல்' ஷரத்தின் கீழ் வரும் எந்தவொரு கணக்கு/கள் ஆகும். இந்த ஏலம் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி நடைபெறும்:

மாவட்ட ஏலத் தேதி : 23.07.2026 இணையவழி ஏலத் தேதி : 24.07.2026

அப்பupபடைக் கிளை - ஆலங்குளம் - தொடர்பு: 9500749888 **மாவட்டம் - ஆலங்குளம்** - தொடர்பு: 9500749888 FEDGL00270**05746 அப்பupபடைக் கிளை-ஆடிடி**-தொடர்பு: 9543071752 **மாவட்டம் - மேற்கு மாம்பலம்** - தொடர்பு: 8281847506 FEDGL01650**09172 அப்பupபடைக் கிளை - திண்டுக்கல்** - தொடர்பு: FEDGL01900008747**மாவட்டம் - திண்டுக்கல்** - தொடர்பு: 9790395264 **அப்பupபடைக் கிளை - ஒசூர்** - தொடர்பு: 9361250552**மாவட்டம் - கிருஷ்ணகிரி** - தொடர்பு: 9751555817 FEDGL04620**03958,** 003959 **அப்பupபடைக் கிளை - கிருஷ்ணகிரி** - தொடர்பு: 9751555817 **மாவட்டம் - கிருஷ்ணகிரி** - தொடர்பு: 9751555817 FEDGL03960**04901 அப்பupபடைக் கிளை - மங்கலம் சாலை** - தொடர்பு: 9790191421 **மாவட்டம் - மங்கலம் சாலை** - தொடர்பு: 9790191421 **அப்பupபடைக் கிளை - நெய்வேலி** - தொடர்பு: 9677304616**மாவட்டம் - கடலூர்** - தொடர்பு: 9715206678 FEDGL04440**04845,** 005617 **அப்பupபடைக் கிளை - பாலக்கரை** - தொடர்பு: 9952354799 **மாவட்டம் - பாலக்கரை** - தொடர்பு: 9952354799 FEDGL01850**08125,** 008664 **அப்பupபடைக் கிளை - பல்லடம் சாலை** - தொடர்பு: 9626967652 **மாவட்டம் - மங்கலம் சாலை** - தொடர்பு: 9790191421 FEDGL02140**09653 அப்பupபடைக் கிளை - பள்ளிப்பாளையம்** - தொடர்பு: 9976370274 **மாவட்டம் - பள்ளிப்பாளையம்** - தொடர்பு: 9976370274 **அப்பupபடைக் கிளை - பார்க் சா